Crl. Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
----------

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI.

Calendar Case No. : C.C.53/2016 08.04.2019 - திங்கள்கிழமை

Miscellaneous :

Prosecution : அ.சா.8

Deposition of Witness for

Name : மருத்துவர்.துவாரகேஷ்

Father's Name : அப்பாராஜ்

Age : 28

Taluk : வால்பாறை

Religion : இந்து

Calling : மருத்துவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 08-04-2019.

<u>முதல் விசாரணை</u>

நான் கோவை அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவர் போதகராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2016-ம் ஆண்டு வால்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வரும் பொழுது 26-8-2016-ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் திருமதி.ஜீவிதா தேவி என்ற 26 வயது பெண் அவரது தாயார் மற்றும் அக்கம்பக்கத்தினரால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்த பொழுது அவரது வீட்டின் முன்பு அவரது கணவரால் சுமார் 3.00 மணியளவில் அரிவாளல் தாக்கியதாக என்னிடம் தெரிவித்தார். சுய நினைவுடன் காணப்பட்டார். தலையில் வலி இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவரது உடம்பில் இடது தோள்பட்டை மற்றும் இடது புற முதுகில் தோல் ஆளத்திலான 8 x 0.5 c.m. மற்றும் 7 x 0.5 c.m. அளவிலான சிதைந்த காயம் காணப்பட்டது. மேலும், அவரது

தலையில் வீக்க காயம் காணப்பட்டது. அவரை நான் உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கி காயச்சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காயம்பட்ட நபர் கூர்மையான பகுதியில் உள்ள இடங்களில் கீழே விழும் பொழுது இரு பக்கமும் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை. ஒரு பக்கம் காயம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. தவறி கீழே விழும் பொழுது தலையில் வீக்க காயம் ஏற்படுதவற்கு வாய்ப்புகள் உள்ளது.

(ஒப்பம்/- S.P.கவிதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Compared by S.Shakila